[5th March 1969

THE HON. THIRU S. MADHAVAN: It is not correct to say that there are one or two schemes. I have got seventeen schemes for which there is a provision of Rs. 118 lakhs.

Handloom fabrics

* 132 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is a stagnation of handloom fabrics to the value of about one crore of rupees in Madurai and Ramanathapuram districts; and

(*b*) the reasons for such stagnation?

கைத்தறித் துணிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றனவா ?

(இ) இந்தத் தேக்கத்திற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) அவை தேங்கிக் கிடப்பதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாகின்றன—

(1) தெற்கே உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளோடு போட்டிபோடும் வண்ணம் வட இந்தியாவில் உற்பத்தியாகும் விசைத்தறித் துணிகளே பெருமளவில் குவிப்பது.

(2) பயன்படுத்துவோரின் உடை முறை மாறியிருத்தல், அவர்கள் டெரிலின், நைலான் போன்றவற்ருலான ஆடை அணியத் தொடங்கியது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே. இதற்கு முன்னல் தொழில் அமைச்சராக இருந்த ஆர். வெங்கடராமன் அவர்கள் பல்வேறு முயற்சிகள் எடுத்து பல்வேறு நாடுகளுக்கு தூது கோஷ்டிகளே அனுப்பி கைத்தறித் துணி தேங்கிக்கிடக்காமல் விற்பதற்கு ஏற்பாடு செய்தார். அதைப்போல முயற்சிகள் ஏதாவது இந்த அரசு எடுத்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அப்போது நான் எதிர்க் கட்சியில் இருந்து கேட்டேன். அவர்கள் தந்த பதில், எத்தனை முயற்சிகள் எடுத்தும் காரியம் கை கூடவில்லை என்பதுதான். அப்போது வண்ணம் மாறும் துணி என்ற பாணியில் தயாரித்து அனுப்பி வந்தோம். அதன் பிறகு ஜப்பானில் அதேபோன்ற வண்ணம் மாறும் துணிகளே உற்பத்தி செய்து போட்டிக்கு வந்து விட்டார்கள். நமக்கு வெளிச் சந்தையில் இடம் இல்லாமல் போய்

5th March 1969]

விட்டது. அதில் தோல்வி கண்டோம். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் நாம் பெற்றிருந்த சந்தையும் போய்விட்டது. அங்கே சுதந்திரப் போராட்டத்தில் ஆட்சி மாறியதால் இங்கிருந்து இறக்குமதி செய்து வந்த லுங்கி சாரம் போன்ற துணிகள் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். இலங்கை போன்ற நாடுகளிலுள்ள சூழ்நிலை காரணமாக அங்கேயும் இறக்குமதி நிறுத்தப்பட்டது. எக்ஸ் போர்ட்ஸ் புரமோஷன் கவுன்சில் அடிப்படையில் இங்குள்ள தொழில்துறை செயலாளர் அவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று வந்தார்கள். முன்னாள் தொழில் அமைச்சர் வெங்கடராமன் அவர்களும் சென்று வந்தார்கள். இவைகள் எல்லாம் எக்ஸ்போர்ட்ஸ் புரமோஷன் கவுன்சில் சார்பில் நடைபெற்றது. அவர்களிடமும் சொல்லியிருக்கிறோம். அவர்கள் இதைப் பற்றி ஆராய்ந்து வெளிநாடுகளுக்கு நம் துணிகளை ஏற்றுமதி செய்யத் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, முன்பு நம் சபையில் உறுப்பினராகவும் இப்போது பாராளுமன்ற அங்கத்தினராகவும் இருக்கிற திரு. எஸ். கே. சம்பந்தன் அவர்கள் வெளிநாடுகளுக்குக் கைத்தறித் துணி ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக ஒரு டெபுடேஷனில் போயிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். போய் வந்தபிறகு அவர்கள் ஏதாவது அறிக்கை சமர்ப்பித்தார்களா ? அதன் பேரில் முன்னேற்றம் காண வழிவகை தென்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அது பற்றிய தகவல் இல்லை. வட மாநிலங்களில் உற்பத்தியாகும் மற்ற துணிகளினாலும் வெளிநாட்டுப் பல வகைத் துணிகளினாலும் நம்முடைய கைத்தறித் துணிக்குச் சந்தை கிடைப்பது சந்தேகமாக இருக்கிறது. நாம் நம் துணியின் தரத்தை உயர்த்தி, மாதிரிகளை தற்காலத்திற்கேற்றவாறு மாற்றி வெளிச் சந்தைக்கு ஏற்றவாறு உற்பத்தி செய்யக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டால்தான். பிரச்னைகளைச் சமாளிக்க முடியும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : இதற்கு முன்பு ஐந்து, பத்து ஆண்டுகளுக்கு முன்பு வட இந்திய ராஜ்யங்களுக்கு எவ்வளவு கைத்தறித் துணி சென்றது ? இந்த இரண்டு ஆண்டுகளில் அந்த அளவு குறைந்ததற்குக் காரணம் என்ன ? வடக்கே உள்ளவர்களிடம் நாம் சுமுகமான உறவு வைத்துக் கொள்ளாததுதான் அதற்குக் காரணமா ? அதனால்தான் கல்கத்தா, உத்தர பிரதேசம் போன்ற மாநிலங்களில் நம் துணியை வாங்க மறுக்கிறார்கள் என்று கூறப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அப்படிப்பட்ட செய்தி எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. வட மாநிலங்களில் விசைத் தறி விரைவாகப் புகுத்தப்பட்டு. அந்தத் துணிக்கு நல்ல சந்தை பெறப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்தில் பல காலமாக விசைத் தறி கூடாது என்ற கொள்கையை அனுசரித்து வந்ததால் நம்முடைய துணிக்கு சந்தை கிடைப்பது இப்போது அரிதாக இருக்கிறது. நாலுக்கு தான் இப்போது சந்தை தேடி வருகிறோம்.

திரு. சா. கணேசன் : கைத்தறித் துணி என்று பெயர் சொல்லி விட்டு விசைத்தறி நூலைப் பயன்படுத்திக்கொண்டு அதற்கு சலுகை, ஊதியம், வாய்ப்பு கொடுக்கலாமா? அதனால்தான் இயந்திர உதவியின்றி கையினால் நெய்யும் மக்களுக்கு நியாயமான, தேவையான உதவிகள் கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா? அறிந்திருந்தால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கைத்தறிக்குச் சில சலுகைகள் இருக்கின்றன. விசைத் தறிக்குச் சில சலுகைகள் இருக்கின்றன. விசைத் தறி நூலை வைத்து கைத்தறி நூல் என்று மாறாட்டமாகச் சொல்லி தவறு செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

Sale of handloom fabrics

*** 133 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Central Government have agreed to give a rebate of 10 paise per rupee hereafter for the sale of handloom fabrics?**

கைத்தறித் துணி விற்பனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

கைத்தறித் துணிகளுக்கு இனி ரூபாய்க்கு 10 பைசா தள்ளுபடி கொடுக்க மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நாடு முழுவதும் விற்பனை யாகாமல் பெருமளவிற்குத் தேக்கமடைந்துள்ள கைத்தறித் துணிகளை வாங்குமாறு மக்களைத் தூண்டும் நோக்கத்துடன், முதற்கண் நான்கு வாரங்களுக்கு நாடு முழுவதும் சில்லறையில் விற்பனையாகிற கைத்தறித் துணிக்கு ரூபாய்க்கு ஐந்து காசு கூடுதல் தள்ளுபடியை வழங்குவதற்கும், அவசியமாயிருப்பின் அந்தத் தள்ளுபடியை மூன்று திங்களுக்கு மேற்படாத கால அளவிற்கு மேலும் நீட்டிப்பதற்கும், 1968 ஜூலையில் இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. கைத்தறித் துணி சில்லறை விற்பனையின் மீது ஆண்டு முழுவதும் அனுமதிக்கப்படுகிற ஐந்து காசு தள்ளுபடிக்குக் கூடுதலாக மேற்குறிப்பிட்ட தள்ளுபடியை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிலிருந்து 10 பைசா கொடுப்பதாக இருந்தால் மாநில சர்க்காரும் 10 பைசா கொடுத்தால் தேங்கியுள்ள கைத்தறித் துணியை நல்லமுறையில் விற்கலாம் அல்லவா? அதைப் பற்றிப் பரிசீலிக்கப்படுமா?